## உளநல நீதிமன்ற உதவிச் சேவைகள்

### சேவை பெறத் தகுதியுடையோர்

- 16 வயதிற்கு மேற்பட்டவர்கள்
- உள நலப் பிரச்சினைகள் உள்ளவர்கள்
- மிகக் குறைந்த அளவு குற்றச் செயல்களுக்காகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள்

### ரொறன்ரோவில்:

- சிறைப் பாதுகாப்பில் உள்ள பெண்களுக்குக் கொலிஜ் பார்க் நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்படும். சிறைப் பாதுகாப்பிலிருந்து விடுபட்ட பெண்கள் குறிப்பிட்ட குற்றத்தினைச் செய்த அதே மாவட்ட நீதிமன்றங்களில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்.
- ஆண்கள் குற்றம் இழைத்த அதே மாவட்ட நீதிமன்றங்களில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்.
- பழைய நகர மண்டபம், கொலிஜ் பார்க் நீதிமன்றம் ஆகியவற்றிற்கான நீதிமன்றத்தில் தோன்றுவதற்கான உளத் தகைமை மதிப்பீடு பழைய நகர சபையிலுள்ள நீதிமன்ற அறை 102 இல் இடம்பெறும்.

### சேவைகளைத் தொடர்புபடுத்தக் கோருதல்

குற்றம் சுமத்தப்பட்டவர்கள், குடும்பத்தினர், அல்லது நண்பர்கள், பொலீஸார், அரச சட்டத்தரணி, எதிர்தரப்பு வழக்கறிஞர், நீதிபதி, சேவைகள் வழங்குவோர், சமூக முகவர் நிலையங்கள் உட்பட எவருமே எங்கள் சேவைக்காகப் பரிந்துரைகள் செய்யலாம்.

இந்தச் சேவைகள் சுகாதார அமைச்சின் நிதியுதவியோடும் சட்டமாஅதிபதி அமைச்சின் அனுசரணையோடும் வழங்கப்படுகின்றன.

பாவனையாளருக்கு எந்தவித கட்டணமும் இல்லை.

சீஆர்சீரீ கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ரொறன்ரோப் பகுதியில் சேவையாற்றும் இலாபநோக்கற்ற, சமூக உளநல அறக்கொடை முகவர் நிலையமாகும்.

நாங்கள் உளநல அமைப்பைப் பயன்படுத்தும் 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு உதவியளிக்கிறோம். ஒன்ராறியோ சுகாதார-நெடு நாள் பராமரிப்பு அமைச்சு பிரதான நிதி உதவியை வழங்குகிறது. ரொறன்ரோ பெரும்பாக யுனைட்டட் வே, கனடிய பாரம்பரிய அமைச்சு, ரொறன்ரோ றொட்டரிக் கழகம், ஈஜேஎல்பி பவுண்டேசன், ஒன்ராறியோ றிறில்லியம் பவுண்டேசன், ரொறன்ரோ நகர சபை- சேவைபெறும் வழி, சமத்துவ நிதியளிப்பு ஆகியவற்றால் துணை உதவி நிதி வழங்கப்படுகிறது.

### அறக்கொடைப் பதிவு எண்:

#118871128 RR0001

நன்கொடைகளை நன்றியுடன் ஏற்றுக்கொள்வோம்.

மேலதிக தகவல்களுக்கும் ரொறன்ரோப் பகுதிக்கான எங்கள் உதவிகள், வளங்கள், உளநல சேவைகள் பற்றிய முழுமையான வழிகாட்டிக்கும் www.crct.org இணையத் தளத்தைப் பார்க்கவும்.

Community Resource Connections of Toronto

366 Adelaide Street East, Suite 230 | Toronto, ON M5A 3X9
தொ.பே: (416) 482-4103 | தொ.ந: (416) 482-5237 | crct@crct.org

Community Resource Connections of Toronto

# உளநல நீதிமன்ற உதவிச் சேவைகள்

(Mental Health Court Support Services)

## உளநல நீதிமன்ற உதவிச் சேவைகள்

மிகச் சிறிய அளவிலான அபாயவிளைவுள்ள – குற்றச் செயல்களுக்குத் தண்டனை பெற்றவர்களுக்கு உளநல சேவைகளையும் ஏனைய உதவிகளையும் பெறுவதற்கான வழிகளைக் கண்டறிந்து உதவுவதே உளநல நீதிமன்ற உதவிச் சேவைத் திட்டத்தின் நோக்கமாகும்.

குற்றவியல் தண்டனையை எதிர்நோக்கும் சிலருக்கு குற்றவியல் நீதி முறைமையிலும் பார்க்க உளநல முறைமையில் அமைந்த நீதி சிறப்பாக உதவும் என்பதை உளநல நீதிமன்ற உதவிச் சேவைத் திட்டம் அங்கீகரிக்கிறது. இவர்கள் எங்கள் உதவிச் செயல் திட்டத்தில் தாமாகவே முன்வந்து பங்காற்றுவதன் மூலம் குற்றவியல் நீதி முறையின் வழமையான துறையில் இருந்து வெளியேற்றப்படுகிறார்கள். அந்த நபரை உளநல நீதிமன்றப் பணியாளர் சந்தித்து அவரது நிலைமை மற்றும் தேவைகளை மதிப்பீடு செய்கிறார். அவரது உளநல தகைமை, அவர் வாழ்கின்ற தற்போதைய வாழ்க்கை நிலைமை, கிடைக்கின்ற ஆதரவுகள், உளநோய் தொடர்பான ஏனைய சேவைகள் இந்த மதிப்பீட்டில் அடங்கும்.

மதிப்பீட்டின் தொடர்ச்சியாக உளநல நீதிமன்ற பணியாளர், சம்பந்தப்பட்ட நபருடன் இணைந்து அவர் குற்றத்திலிருந்து வெளியேறுவதற்கான ஒரு திட்டத்தை உருவாக்குவார். அவருக்குத் தகுந்த சேவைகள் பற்றியும் எடுத்துக் கூறுவார். இவற்றில் மனநோய் மதிப்பீடு, குணமாக்கல், அவருடைய அடிப்படைத் தேவைகள் பெறுவதற்கான வளங்களைப் பெறுதல் (வதிவிடம், உணவு, உடை), குறுகிய அல்லது நீண்டகால சமூக ஆதரவு ஆகியவை உள்ளடக்கப் படுகின்றன. இந்தத்திட்டத்தை அங்கீகரித்த பின்னர் அது மாநில அரச சட்டத்தரணியின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்படுகிறது. இவர் சேவைகளையும் உதவிகளையும் இனங்காண்பதற்கும் உதவி பெறுவதற்கும் உளநல நீதிமன்ற உதவிச் சேவையாளர் உதவுவதுடன் குறுகிய கால முகாமைத்துவ உதவியையும் வழங்குவர்.

## சமத்துவ சேவை

வீடற்ற நிலமை, குற்றச்செயல் தொடர்பான சட்டப் பிரச்சினை, இனம், பண்பாடு, இனக்குழுமம், பால்பகுப்பு, மொழி ஆகிய காரணங்களால் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் தடைகளை எதிர்நோக்கும் மக்களுக்கு எங்கள் நிறுவனம் பணியாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது.

## வழங்கப்படும் சேவைகள்

1. உளநலப் பிரச்சினைக்காக தண்டனைக் குறைப்புக்கான சேவை

இச்சேவை பெறுவோர்

- கடுமையான உளநலப் பிரச்சினை/மனநோய் உள்ளவர்கள்
- சிறிய அபாயவிளைவுக் குற்றம் புரிந்ததற்காகக் குற்றம் சுமத்தப்பட்டவர்கள்
- உளநலம் காரணமாகத் தண்டனைக் குறைப்புத் திட்டத்தை ஏற்றுக்கொண்டவர்கள்
- மாகாண அரச சட்டத்தரணியால் தண்டனைக் குறைப்புத் திட்டம் அங்கீகரிக்கப் பட்டவர்கள்

2. குறுகியகால நீண்டகால சேவைகளுக்கும், ஆதரவுகளுக்கும், உதவிகளுக்கும் தொடர்பை ஏற்படுத்துதல்
3. குடும்ப அங்கத்தவர்களுக்கும் முக்கியமான பிறருக்கும் தகவல்களையும் உதவிகளையும் வழங்குதல்
4. பாவனையாளர் பிரச்சினைகள், மனநோய், உளநல சேவைகள், உளநல சேவை அமைப்பு பற்றி அறிவூட்டல்

உளநல நீதிமன்றக் கட்டிடத்தினுள்ளேயே பன்முகப்பட்ட ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. ஆலோசனை என்பது தண்டனைக் குறைப்புத் திட்டம் தொடர்பானதோ அல்லது முகாமைத்துவத் தேவை தொடர்பானதோ அல்லாத ஒன்றிற்கும் வழங்கப்படும். உதாரணமாக ஒரே ஒரு தடவை மாத்திரம் கேட்கப்படுகின்ற பின்வருவன போன்ற கேள்விகள் அடங்கும். நீதிமன்ற நடைமுறை பற்றிய கேள்விகளுக்கு விடையளித்தல் அல்லது சமூக உதவிக்குத் தொடர்புபடுத்தல்/தகவல் தருதல் போன்றனவாகும். தண்டனைக் குறைப்புக்குத் தகுதியற்றவராகக் கருதப்படும் குற்றம் சுமத்தப்பட்டவர், அரச சட்டத்தரணிகள், எதிர்தரப்பு, நீதிச்சேவையாளர் அல்லது நீதிமன்ற ஆலோசகர், குடும்ப அங்கத்தவர், குற்றம் சுமத்தப்பட்டவர், சேவை வளங்குநர் ஆகியோருக்கு ஆலோசனை வழங்கப்படலாம்.

## அந்தரங்கம் பேணல்

இந் நிறுவனப் பணியாளர்கள், மாணவர்கள், தொண்டர்கள் அனைவரும் அந்தரங்கம் காக்கும் சத்தியப்பிரமாணம் ஒன்றில் ஒப்பமிடும்படி வேண்டப்படுவர். உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பிரத்தியேகமாக வைத்திருப்பதோடு சட்டப்படி வேண்டப்பட்டாலன்றி உங்களுடைய சம்மதமின்றி எவருக்கும் வெளியிடமாட்டோம். எங்கள் அந்தரங்கம் காக்கும் கொள்கைகள் பற்றி மேலதிகமாக அறிந்துகொள்ள செயல் திட்ட அந்தரங்கம் காக்கும் பணியாளரை (416) 482-4103 இணைப்பு 232 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

## நீதிமன்ற உதவிப் பணிவலை

ரொறன்ரோ உளநல நீதிமன்ற உதவிப் பணிவலை ரொறன்ரோ நகரின் நீதிமன்ற உதவிச் சேவைத் திட்டங்களின் பணியாளர்களையும் முகாமையையும் கொண்டுள்ளது. தகவல்கள் பரிமாறுவதற்கும் அவற்றைச் சேகரிப்பதற்கும், பொதுவான நடைமுறைகளை விருத்தி செய்வதற்கும், பிரச்சினைகளை இனங்காண்பதற்கும், சேவைகளை விருத்தி செய்வதற்கும் வேண்டிய உத்திகளை அறிவதற்குக் கிரமமாகக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

## ரொறன்ரோ நீதிமன்றங்கள் – சேவைகள் வழங்குவோர்

கொலிஜ் பார்க் – ஒன்ராறியோ நீதின்றம்
CRCT (நீதிமன்ற உதவிப் பணியாளர்) – அறை 263.
தொலை பேசி: (416) 598-8103
CRCT (நீதிமன்ற உதவிப் பணியாளர்) – அறை 265.
தொலை பேசி: (416) 598-8108 | தொலை நகல்: (416) 598-3495

மெற்றோ மேற்கு – ஒன்ராறியோ நீதிமன்றம
CMHA – ரொறன்ரோ மேற்கு (நீதிமன்ற உதவிப் பணியாளர்) தொலை பேசி: (416) 314-3408 or (416) 314-3384 | தொலை நகல்: (416) 314-5765

மெற்றோ வடக்கு ஒன்ராறியோ நீதின்றம்
COTA – (நீதிமன்ற உதவிப் பணியாளர்)
தொலை பேசி: (416) 667-0933 | தொலை நகல்: (416) 667-1084
பழைய நகரமண்டப ஒன்ராறியோ நீதின்றமும் உளநல ஆலோசனை நீதிமன்றமும்

CRCT (நீதிமன்ற உதவிப் பணியாளர் மற்றும், நீதிமன்ற சமூக உதவியாளர்) – அறை 20

தொலை பேசி: (416) 364-8394 | தொலைநகல்: (416) 364-3671
CRCT (திட்ட முகாமையாளர்) – அறை 20
தொலை பேசி: (416) 364-8394 | தொலை நகல்: (416) 364-3671

மெற்றோ கிழக்கு – ஒன்ராறியோ நீதிமன்றம்
CMHA – ரொறன்ரோ கிழக்கு (நீதிமன்ற உதவிப் பணியாளர்) தொலை பேசி: (416) 285-4177 |
தொலை நகல்: (416) 285-1663